©
தமிழ்நாடு அரசு
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 6] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 7, 2024
தை 24, சோபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2055

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–

### சட்ட எண். 32/2023.

**2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டத்தை திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 11/2020. 2. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2–ஆம் பிரிவில், (a) கூறில், “தேனீ வளர்ப்பு” எனும் சொற்றொடருக்குப் பின்பு, “கால்நடை பராமரிப்பு, உள்நாட்டு மீன்வளம்” எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும். 2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 5–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 5–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கிய தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் அதிகார அமைப்பு என்ற பெயரில் ஓர் அதிகார அமைப்பானது இருத்தல் வேண்டும்:—

| | | | |
|---|---|---|---|
| (i) | முதலமைச்சர் | – | தலைவர்,<br>பதவி வழி; |
| (ii) | நீர்வளத்துறை அமைச்சர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (iii) | நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (iv) | வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (v) | தொழில்துறை அமைச்சர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (vi) | சட்டத்துறை அமைச்சர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (vii) | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (viii) | மீன்வளம், மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (ix) | உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (x) | நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xi) | சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xii) | அரசு தலைமைச் செயலாளர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xiii) | வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை – உழவர் நலத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – | பதவி வழி<br>உறுப்பினர்–செயலாளர்; |
| (xiv) | நீர்வளத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xv) | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xvi) | தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xvii) | அரசு செயலாளர், சட்டத் துறை | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xviii) | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xix) | கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xx) | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xxi) | நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – | பதவி வழி உறுப்பினர்; |

| | | | |
|---|---|---|---|
| (xxii) | மனிதவள மேலாண்மைத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xxiii) | சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xxiv) | துணை வேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | – | பதவி வழி உறுப்பினர்; |
| (xxv) | பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தை பிரதிநிதித்துவப்படுத்தும், அரசால் முன்மொழியப்படலாகும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் | – | உறுப்பினர்கள்; |
| (xxvi) | அரசால் முன்மொழியப்படலாகும் மூன்று விவசாயப் பிரதிநிதிகள் | – | உறுப்பினர்கள்; |
| (xxvii) | வேளாண் அறிவியல், தோட்டக்கலை அறிவியல் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் துறை ஒவ்வொன்றிலும் அரசால் முன்மொழியப்படலாகும் ஒரு நிபுணர். | – | உறுப்பினர்கள்.''. |

முதலாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின், முதலாம் இணைப்புப் பட்டியலில், ''5. புதுக்கோட்டை மாவட்டத்தின் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, திருவரங்குளம் மற்றும் கறம்பக்குடி வட்டாரங்கள்.'' என்ற உள்ளீட்டிற்குப் பின்பு, பின்வரும் உள்ளீடானது சேர்க்கப்படுதல் வேண்டும்:—

''6. மயிலாடுதுறை மாவட்டம்.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு,*
*சட்டத்துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.